ISSN - 2235-9796

20 பக்கங்கள் 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்


சிலந்தி - 05 ஒக்ரோபர் - 2015 இழை - 49

**வாசக நெஞ்சங்களுக்கு...!**





வலையின் இதழ் 49ஆவது இழையுடன் தனது ஐந்தாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது என்பதை தங்களுக்கு கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். பல சஞ்சிகைகள், பருவ இதழ்கள் வெளிவந்து மூன்று அல்லது ஆறு மாதங்களில் காணாமல் போய்விடுகின்ற நிலையை நாம் கண்கூடு பார்க்கிறோம்.

ஆனால் தனியொருவனால் நடத்தப்படுகின்ற இந்த முயற்சி நீங்கள் ஒவ்வொருவரும் வலைக்கு காட்டி வந்த ஆதரவினாலும், மறுபுறம் இறைவனின் அருளினாலும் தான் கடந்த நான்கு ஆண்டுகள் வரை தொடர்ந்து என்னால் வெளியிட்டு வர முடிந்தது.




இதுவரை வலைக்கு தாங்கள் காட்டி வந்த ஆதரவுக்கு மிக்க நன்றிகளைக் கூறி நிற்கின்றேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?

இதுவரை 16 பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்த வலை அடுத்து வருகின்ற 50 ஆவது இழையிலிருந்து நான்கு பக்கங்களைக் கூட்டி 20 பக்கங்களாக வெளிவரவிருக் கின்றது. அதுமட்டுமன்றி அநேக வாசகர்களின் வேண்டுகோ ளுக்கு இணங்க வலையுடன் **நுண்ணறிவு வினா-விடையும்** இணைந்து வெளிவரவிருக்கின்றது என்பதையும் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.




அத்துடன் வலையின் விலையில் எதுவித மாற்றமும் இல்லை என்பதுடன், அதன் விலை 30/- வாகவே இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


எனவே இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில்
எனது பணி தொடரும்...

நன்றி.

- 'வலை' வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

# இம்மாத சர்வதேச தினங்கள்...




✧ ஒக்ரோபர் - 01 - உலக சிறுவர் தினம்
✧ ஒக்ரோபர் - 01 - உலக மரக்கறிகள் தினம்
✧ ஒக்ரோபர் - 01 - உலக முதியோர் தினம்
✧ ஒக்ரோபர் - 02 - உலக சைவ உணர்வாளர் தினம்
✧ ஒக்ரோபர் - 02 - உலக அகிம்சை தினம்
✧ ஒக்ரோபர் - 03 - உலக மது ஒழிப்பு தினம்
- 03 - உலக உயிரினங்கள் தினம்
✧ ஒக்ரோபர் - 04 - உலக விலங்குகள் தினம்
✧ ஒக்ரோபர் - 05 - உலக இயற்கைச் சூழல் தினம்
- 05 - உலக குடியிருப்பு தினம்
2015 இலங்கையின் தொனிப்பொருள் "யாவருக்கும் பொதுவான இடங்கள்"
✧ ஒக்ரோபர் - 08 - உலக இயற்கைச் சிரழிவு குறைப்பு தினம்
- 08 - உலக ஓய்வூதிய தினம்
✧ ஒக்ரோபர் - 09 - உலக தபால் தினம்
✧ ஒக்ரோபர் - 09 - உலக கண்பார்வை தினம்
✧ ஒக்ரோபர் - 10 - உலக மனநல தினம்
✧ ஒக்ரோபர் - 11 - உலக பெண் பிள்ளைகள் தினம்
✧ ஒக்ரோபர் - 12 - உலக மூட்டுவாத தினம்
✧ ஒக்ரோபர் - 14 - உலக தரநிர்ணய தினம்
✧ ஒக்ரோபர் - 15 - உலக உளவளத்துணை தினம்
✧ ஒக்ரோபர் - 16 - உலக கை கழுவுதல் தினம்
- 16 - உலக உணவு தினம்
✧ ஒக்ரோபர் - 17 - உலக வறுமை ஒழிப்பு தினம்
✧ ஒக்ரோபர் - 20 - உலக புள்ளிவிபரவியல் தினம்
- 20 - உலக ஒஸ்டியோபொரோஸிஸ் தினம்
✧ ஒக்ரோபர் - 21 - உலக விவசாய தினம்
✧ ஒக்ரோபர் - 24 - உலக ஐக்கிய நாடுகள் சபை தினம்
✧ ஒக்ரோபர் - 29 - உலக இணையத்தள தினம்
- 29 - உலக பாரிசவாத தினம்
2015 தொனிப்பொருள் "நானும் ஒரு பெண்"
✧ ஒக்ரோபர் - 30 - உலக சிக்கன தினம்
✧ ஒக்ரோபர் - 31 - உலக நகர தினம்

**உங்கள் பார்வையில் வலை...**

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

# இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

- இலங்கையின் நீதித்துறையின் திறன்விருத்திக்கு அண்மையில் நிதியுதவி வழங்கிய நாடு எது?
  **அமெரிக்கா (16 இலட்சம் டொலர்)**

- பொருளாதாரச் சுட்டெண்ணில் தற்போது இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
  **68 ஆவது**
  73 ஆம் இடத்திலிருந்து 68 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.
  இங்கு முதல் 10 நாடுகள் வரிசையில் முறையே சுவிட்சர்லாந்து முதலாவதாகவும், தொடர்ந்து சிங்கப்பூர், அமெரிக்கா, ஜேர்மனி, நெதர்லாந்து, ஜப்பான், ஹொங்கொங், பின்லாந்து, சுவிடன், இங்கிலாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

- உலக மனநல ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு அதன் சின்னம் பொறிக்கப்பட்ட படம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அச்சின்னம் எது?
  **வண்ணத்துப் பூச்சி**

- இலங்கையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையின் படி எத்தனை எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்?
  2 ஆயிரத்து 173 பேர்
  இதில் 73 பேர் சிறுவர்களாவர்.

- நீண்ட தூர இலக்கைத் தாக்கும் ஏவுகணைச் சோதனை ஒன்றை அண்மையில் வெற்றிகரமாகச் சோதனை செய்த நாடு எது?
  **ஈரான்**

- இந்திய - இலங்கைப் படையினர் அண்மையில் நடத்திய கூட்டுப் பயிற்சியின் பெயர் என்ன?
  **"மித்ரசக்தி-2015"**

- 2015 ஒக்ரோபர் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இலங்கையில் எத்தொனிப் பொருளில் பேரணி நடைபெற்றது?
  **"சுகாதாரமே முதலிடம்"**

- 2015 ஒக்ரோபர் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் நற்சிந்தனை என்ன?
  **"சிறுவர்களுக்கு நட்புறவான சூழல் உலகை மிளிரச் செய்யும் அழகிய தேசம்"**

❒ 30 ஆவது வெனிசுலா கூட்டத்தொடரில் இலங்கையை வெகுவாகப் பாராட்டிப் பேசிய நாடுகள் எவை?
**அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், நோர்வே மற்றும் அவுஸ்ரேலியா**

❒ உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் 2015 வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக இலங்கையிலிருந்து பெரு நாட்டுக் குச் சென்ற அமைச்சர் யார்?
**நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க**

❒ உலகின் மிகப்பெரிய தேநீர் விருந்துக்கான உத்தியோகபூர்வ சிற்றுண்டி யாகத்தெரிவு செய்யப்பட்ட பிஸ்கட் எது?
**மலிபன் சிமாட் கிறீம் கிறேக்கர் (Maliban Smart Cream Craker)**

❒ 2015 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் 196 புள்ளிகளைப் பெற்று மூவர் முதலிடத்தினைப் பெற்றுள்ளனர். அவர்கள் யார்?
1. **கவிந்தா உனத்தென்ன (கங்கசிறிபுர வித்தியாலயம், கம்பொளை)**
2. **கவிஷ்க வணிகசேகர (மாகுர முதன்நிலை பாடசாலை, மல்மடுவ)**
3. **லக்ஷானி மேலனி (மாவனல்லை, ஸ்ரீ சுமங்கள கனிஷ்ட வித்தியாலயம்)**

❒ 2015 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் யார்?
**தக்ஷியா பத்மநாதன் - 193 (மட்டக்களப்பு வின்செண்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை)**
**சோதிநாதன் வசீகரன் - 192, சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

❒ 2015 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் மாவட்ட ரீதியிலான வெட்டுப் புள்ளியின் படி குறைந்த வெட்டுப்புள்ளி வழங்கப்பட்ட மாவட்டம் எது?
**அம்பாந்தோட்டை (150)**
**இதேவேளை கூடுதல் வெட்டுப்புள்ளி 154 ஆகும். இது கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, மாத்தறை, கண்டி, காலி, கேகாலை, குருநாகல் போன்ற மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

❒ சீன - தெற்காசிய நட்புறவுச் சங்க மாநாடு இம்முறை எங்கு நடைபெற்றது?
**கொழும்பில்**

❒ தெற்காசிய வலயத்தில் பழமையான ஜனநாயக உரிமைகளை பிரதிநிதித்து வப்படுத்தும் நாடுகளில் முன்னிலையில் உள்ள நாடு எது?
**இலங்கை**

- ஐ.நா. சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்று எத்தனை வருடத்தை நிறைவு செய்துள்ளது? **60 வருடங்கள்**

- இலங்கையில் அண்மையில் மகாத்மா காந்தியின் எத்தனையாவது ஜனன தினம் கொண்டாடப்பட்டது? **146 ஆவது**

- உலக சுகாதார நிறுவனத்தின் உச்சி மாநாடு 2016 இல் எங்கே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது? **கொழும்பில்**

- இலங்கையில் தற்போது எத்தனை பேர் மனநல நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது? **20 - 25 வீதம் பேர்**

- இலங்கையின் சிரேஷ்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் அண்மையில் காலமானார். அவர் யார்? **லயனல் மென்டிஸ்**

- உலக மனநல தினத்தில் (ஒக்ரோபர் 10) ஜனாதிபதியால் மனநல மேம்பாட்டுக்காகப் பாடுபடும் சுகாதார சேவை உத்தியோகத்தர் இருவர் அண்மையில் பாராட்டப்பட்டனர். அவர்கள் யார்?
  - **நொகான் சமரஜீவ**
  - **அசோக சஞ்சீவ**

- 73 வயதான தனது தந்தையை நாய்க்கூட்டில் அடைத்து வைத்த மகனை பொலிஸார் கைது செய்தனர். அந்த இடம் எது?
  **கண்டி பலகொல்ல பகுதி**

- இலங்கைக்கு தெற்கே அம்பாந்தோட்டைக்கு அப்பால் 100 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கடற்பகுதியில் மர்மப் பொருள் விழுமென நாசா அறிவித்துள்ளது. அந்த மர்மப் பொருளுக்கு இடப்பட்ட பெயர் என்ன?
  **WT1190 F**
  இந்த மர்மப் பொருளை 2013 இல் முதன் முதலில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர் என்பது குறிப்பிடத்தகது.

- இலங்கையில் தற்போது எத்தனை இலட்சம் வீடுகள் மின்சார வசதியின்றி இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது? **2 இலட்சம்**

- உலக புத்தக மிதக்கும் கப்பல் தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு வந்தடைந்தது. அக்கப்பலின் பெயர் என்ன? **லோகோஸ்**

- 2016 ஆம் ஆண்டு நோயற்ற அரிசி வகை ஒன்றை அறிமுகம் செய்ய விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த அரிசி வகையின் பெயர் என்ன? **“நிரோகீ சஹல்”**

❒ இலங்கையில் பயிர் செய்யப்படும் பப்பாசி இனமான ரெட் லேடி இனத்தை விட சிறப்பாகப் பயன்தரும் ஒரு பப்பாசி இனத்தின் பெயர் என்ன?
ரத்னா

## இலங்கையில் இன்று இவர்கள்...

- யாழ்.மறைமாவட்டத்தின் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயராக பரிசுத்த பாப்பரசரினால் நியமிக்கப்பட்டுள்ள குருவானவர் யார்?
  அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார்

- இலங்கைக்கான சீனத் தூதுவர் யார்?
  யீ.சியாங்லியல்

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் யார்?
  உபுல் தேசப்பிரிய (சட்டத்தரணி)

- இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் யார்?
  டில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க

- பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர் யார்?
  பிரியசாத் டெப்

- இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் யார்?
  ஷெலி வைடிங்

- இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யார்?
  அப்துல் கெசாப்

- கைத்தொழில் வர்த்தக அமைச்சின் செயலாளர் யார்?
  ஜே.எம்.கே.பி. தென்னக்கோன்

- இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் யார்?
  டி.ஜீவநாதன்

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◈ அண்மையில் டுவிட்டரில் இணைந்த பிரபலம் யார்
எட்வேர்ட் ஸ்னோடன் (அமெரிக்க)

◇ தனது நாட்டில் கலப்பட உணவுக்கு அண்மையில் தடை விதித்துள்ள நாடு எது?
**சீனா**

◇ இணையத் தாக்குதல் காரணமாக முடங்கியிருந்த இணையத் தளங்கள் அண்மையில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. அது எந்த நாட்டு இணையத்தளங்கள்?
**தாய்லாந்து**

◇ வயோதிபத்தை தடுக்கும் பக்டீரியாவைக் கண்டுபிடித்துள்ளதாக அண்மையில் பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ள விஞ்ஞானி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
**ரஷ்யா**

◇ உலகில் ஒரு நாட்டில் ஏற்பட்டிருக்கும் "காட்டுத் தீ" யின் காரணமாக தெற்காசியா முழுவதும் பரவி வரும் கரும்புகை வரலாற்றில் இல்லாத வகையில் மோசமானதாகக் காணப்படுகிறது எனக்கூறிய நிறுவனமும், நாடும் எது?
**நாஸா, இந்தோனேசியா**

◇ கடலில் மூழ்கிப் போன டைட்டானிக் கப்பலில் இருந்து உணவு விவரண அட்டையொன்று (மெனு கார்ட்) எத்தனை கோடி ரூபாவுக்கு ஏலம் போனது?
**17 கோடி**
இங்கிலாந்தில் உள்ள சவுத் ஹாம்ப்டன் துறைமுகத்தில் இருந்து நியூயோர்க் நகருக்குச் சென்று கொண்டிருக்கும் போது 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி பனிப்பாறை மீது மோதி மேற்படி கப்பல் விபத்துக்குள்ளானது. இக்கப்பலில் பயணம் செய்த பயணிகள், கப்பல் ஊழியர்கள், கப்பல் தலைவன் உட்பட ஆயிரத்து 503 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

◇ விமானம் மற்றும் கப்பல் என்பவை காணாமல் போனால் அந்த இடத்தை துல்லியமாக அறிந்து தேடுதல் பணிகளைச் சுலபமாக மேற்கொள்ளும் வகையிலான "கியூப் சாட்ஸ்" என்ற மிகச் சிறிய கண்காணிப்பு செயற்கைக் கோளினை அண்மையில் விண்ணுக்குச் செலுத்தியுள்ள நாடு எது?
**சீனா**

◇ மீண்டும் எபோலா குறித்த பீதி கிளம்பியுள்ள நாடு எது?
**நைஜீரியா (இங்கு அண்மையில் ஒருவர் இறந்தமை குறிப்பிடத்தக்கது)**

◇ இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியை அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ள வங்கி எது?
**உலக வங்கி**

◇ உலக புற்றுநோய் தினத்தினை முன்னிட்டு வொசிங்டன் வெள்ளை மாளிகை என்ன செயற்பாட்டை வெளிக்காட்டியது?
**வெள்ளை மாளிகைக்கு இளஞ்சிவப்பு நிற ஒளியூட்டப்பட்டது.**

◇ உலகில் பொருளாதாரத்தின் மையப்புள்ளி "இந்து சமுத்திரம்" என அண்மையில் வர்ணித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யார்?
**அப்துல் கெசாப்**

◇ அண்மையில் சதிக்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மாலைதீவின் துணை ஜனாதிபதி யார்?
**அஹமட் அதீப்**

◇ இந்தோனேசியாவின் சுதேச மாகாணத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனை எது?
**100 பிரம்படி**

◇ இந்தோனேசியாவில் விசேட பலூன் மூலம் இணையத்தள இணைப்புத் தரும் வசதியை ஏற்படுத்தியுள்ள நிறுவனம் எது?
**கூகுள்**

◇ "பிரபஞ்சத்தின் மிகப் பெரிய மர்மமாகக் கருதப்படும் கருந்துவாரத்தை விடவும் பெண்கள் மர்மமானவர்கள்" இப்படிக் கூறிய உலகின் பிரபலமான பௌதீகவியலாளர் யார்?
**ஸ்டீவன் ஹவ்கிங் (பிரித்தானியா)**

◇ பூமியிலிருந்து 418 கி.மீ. உயரத்தில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வகம் அமைத்துள்ளன. இந்தவகையில், இவ் ஆய்வகத்தால் புதிய வகையான பக்டீரியா அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த பக்டீரியாவுக்கு இடப்பட்ட பெயர் என்ன?
**அப்துல்கலாம்**

◇ கனடா நாட்டு பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய இலங்கையின் மூத்த அரசியல்வாதி ஆனந்தசங்கரியின் மகன் யார்?
**ஹரி**

◇ ஐ.நா.வில் அண்மையில் உத்தியோகபூர்வமாக எந்த நாட்டுக் கொடி ஏற்றப்பட்டது?
**பலஸ்தீனக்கொடி**

◇ ஐ.நா. பொதுச்சபையில் எத்தனையாவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார்? **70 ஆவது**

◇ 2016 ஆம் ஆண்டை பரிசுத்த பாப்பரசர் என்ன ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்?
**இரக்கத்தின் ஜுபிலி**

◇ வறுமையில் வாழ்பவர்கள் குறித்து உலக வங்கி அண்மையில் அறிக்கை வெளியிட்டது. அது என்ன?
**2015 ஆம் ஆண்டு முடிவில் வரலாற்றில் முதல் முறையாக உலக சனத் தொகையில் 10 வீதத்துக்கும் குறைவானோரே கடுமையான வறுமையில் வாழ்பவர்களாக இருப்பார்கள் என்று உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.**

◇ விண்கல்லில் இருந்து மாதிரியைப் பெறும் ஜப்பானின் திட்டத்துக்கு வைக்கப் பட்டுள்ள பெயர் என்ன?
**1999 J.U.3**

◇ அப்பிள் நிறுவனத்தின் "மேக் புக்" மடிக்கணினிக்குப் போட்டியாக மைக்ரோ சொப்ட் நிறுவனம் அறிமுகம் செய்த மடிக்கணினியின் பெயர் என்ன?
**"சர்பேஸ் புக்"**

◇ துல்லியமாக இலக்கைத் தாக்கக்கூடிய கண்டம் விட்டு கண்டம் தாண்டும் ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்த நாடு எது?
அவ் ஏவுகணையின் பெயர் என்ன?
**ஈரான், 'இமாத்'**

◇ அண்மையில் வடக்கு பிலிப்பைன்ஸைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
**கோப்பு**

◇ நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இலங்கை வம்சாவளித் தமிழ் பெண் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் யார்?
**கம்சாயினி குணரட்ணம் (வயது-27)**

◇ தற்போது சீனாவில் தம்பதியினருக்கு எத்தனை குழந்தை பெற்றுக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது?
**இரண்டு குழந்தை**

◇ உலகில் அதிக உயிர்களைப் பலிகொள்ளும் தொற்று நோய் எயிட்ஸ் போல முதலிடத்தில் உள்ள நோய் எது?
**காசநோய்**
**இதனை உலக சுகாதார அமைப்பு (WHO) அண்மையில் அறிவித்துள்ளது.**

◇ இலங்கையில் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டலுக்கான அமெரிக்காவின் உறுதியான அர்ப்பணிப்பை விளக்கும் வகையில் அண்மை யில் இரண்டு நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பூகோள மகளிர் விவகாரங்களுக்கான அமெரிக்கத் தூதுவர் யார்?
**கத்தரின் ரஸ்ஸல்**

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ சீசல்ஸ் தீவின் கலாசார தூதுவராக நியமிக்கப்பட்ட பிரபல இசையமைப்பாளர் யார்?
**ஏ.ஆர்.ரஹ்மான்**

◎ நேபாளத்தின் புதிய பிரதமர் யார்?
**ஷர்மா ஒலி**

◎ நேபாள நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக முதன் முதல் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் யார்?
**அன்சாரி கர்திமகர் (வயது-37)**

◎ நேபாளத்தின் முதலாவது பெண் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள் ளவர் யார்?
**மித்யாதேவி பந்தாரி**

◎ நோர்வேயின் ஒஸ்லோ நகரின் பிரதி முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஈழத் தமிழ்ப் பெண் யார்?
**ஹம்சாயினி குணரட்ணம் (வயது-27)**

◎ பிரேசில் நாட்டின் ஜனாதிபதி யார்? **டில்மா ருசெவ்**

◎ ஆஸ்திரியாவின் மோர்லன்ட் நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ப் பெண் யார்?
**சமந்தா இரத்தினம்**

◎ ஜப்பான் நாட்டின் பிரதமர் யார்? **சின்சிரோ**

◎ இந்திய றிசேவ் வங்கியின் 23 ஆவது ஆளுநர் அண்மையில் இலங்கையில் நடைபெற்ற மத்திய வங்கியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விசேட உரையாற்றினார். அவர் யார்?
**ரகுராம் ஜி.ராஜன்**

◎ போலந்து நாட்டின் புதிய பிரதமர் யார்?
**பீற்றா ஸசிட்வோ (பழமைவாத எதிர்க்கட்சியான சட்டமும் நீதியும் கட்சி)**

◎ கௌதமாலாவின் புதிய ஜனாதிபதி யார்?
**ஜிம்மி மொராலெஸ் (இவர் தொலைக்காட்சி நகைச்சுவை நடிகராவார்)**

◎ சிரிய நாட்டு ஜனாதிபதியின் பெயர் என்ன?
**பஷர் அல் அஸாத்**

◎ கனடா நாட்டின் புதிய பிரதமரின் பெயர் என்ன?
**ஜஸ்டின் ட்ரூடோ (திரெய்டு)**

◎ உலகத் தமிழர் ஃபேரவையின் தலைவர் யார்?
**அருட்திரு இம்மானுவேல் அடிகளார்**

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

※ பிரபல மற்றும் சிறந்த நடிகர் வரிசையில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட நடிகர் யார்? **அஜித்குமார்**

※ 25 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன சிலையை இந்தியாவிடம் ஜேர்மனி அண்மையில் கையளித்தது. அந்தச் சிலை எது?
**துர்க்கா சிலை**

※ இந்திய விமானப்படையின் கௌரவ கெப்டனாக நியமிக்கப்பட்ட இந்தியாவின் பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரர் யார்?
**சச்சின் டெண்டுல்கர்**

※ தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தலில் வெற்றியீட்டிய அணி எது?
**நடிகர் நாசர் தலைமையிலான பாண்டவர் அணி**

※ அண்மையில் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த ஈரானியப் படம் எது?
**“முஹம்மத் மெசென்ஜர் ஆஃப் காட்”**
இத்திரைப்படம் சிறந்த வெளிநாட்டுத் திரைப்படத்துக்கான ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

※ இந்தியத் திரையுலகின் பிரபல நகைச்சுவை நடிகை அண்மையில் காலமானார். அவர் யார்?
**மனோரமா**

※ தொழில் முதலீட்டுக்கு உகந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா எத்தனையாவது இடத்தைப் பிடித்துள்ளது?
*130* ஆவது

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். அந்த வீரர் யார்?
**ஷேன் வொட்சன் (வயது-34)**

⊙ இலங்கை டெஸ்ட் அணியின் தொடருக்கு மேற்கிந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட வீரர் யார்?
**ஜேசன் ஹோல்டர்**

⊙ 2015 பொதுநலவாய இளையோர் விளையாட்டுப் போட்டி எங்கு நடைபெற்றது?
**சமோவா**
இதில் இலங்கை சார்பாக பதக்கம் வென்ற வீர, வீராங்கனைகள் யார்?
வெள்ளிப் பதக்கம் - றொஷான் தம்மிக்க ரணதுங்க - உயரம் பாய்தல்
பெண்களுக்கான 48 கிலோ கிராம் பளுதூக்கல் - ஸ்ரீமாலி சமரக்கோன்

⊙ சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளர் யார்? **பிராட் ஹாடின்**

⊙ 12 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி 2016 ஆம் ஆண்டு எங்கே நடைபெறவுள்ளது? **இந்தியாவில்**

⊙ 2020 இல் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் 5 விளையாட்டுக்களை அறிமுகம் செய்ய போட்டி ஒழுங்கமைப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது. அந்த 5 விளையாட்டுக்களும் எவை?
**கராத்தே, பேஸ்போல், போரட்ஸ் கேர்டிங், மலையேற்றம், அலைச்சறுக்கு இதேவேளை, தவிர்க்கப்பட்ட விளையாட்டுக்கள் ஸ்கொஸ், பவுலிங் ஆகும்.**

⊙ சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஓவ் பிரேக் (Off-break) பந்து வீச அனுமதிக்கப்பட்டுள்ள வீரர் யார்?
**தரிந்து கௌசால் (இலங்கை)**

⊙ தனது 500 ஆவது கோலை அடித்துச் சாதனை படைத்த வீரர் யார்?
றொனால்டோ

⊙ இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் நடைபெற்று முடிந்த (20.09.2015) 8 ஆவது பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டியில் இலங்கை எத்தனையாவது இடத்தைப் பெற்றது?
**இரண்டாமிடம்**
**முதலாமிடம் - இந்தியா**
**மூன்றாமிடம் - அவுஸ்ரேலியா - இதில் 54 நாடுகள் பங்குபற்றின.**

⊙ 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 105 வயது முதியவர் ஒருவர் ஓடி கின்னஸ் சாதனை படைத்தார். அந்த முதியவர் யார்?
**ஹைடிகிச்சி (வயது-105, ஜப்பான்)**

⊙ இந்த நூற்றாண்டில் அவுஸ்ரேலிய மண்ணில் அடிக்கப்பட்ட மிகச்சிறந்த சதங்களில் ஒன்றெனத் தெரிவு செய்யப்பட்ட சதம் யாருடையது?
**வீரேந்திர சேவாக்**

⊙ ஜேர்மனியில் அண்மையில் நடைபெற்று முடிந்த, வெறும் ஒன்பதே நிமிடத்தில் 5 கோல்கள் அடித்துச் சாதனை படைத்த வீரர் யார்?
**ரொபர்ட் லெவான் டவ்ஸகி**

⊙ வேலைக்காரச் சிறுமி மீது சித்திரவதை செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் இடைநிறுத்தப்பட்ட பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் யார்?
**ஷஹதாத் ஹுஸைனை**

⊙ 2016 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
**பிரேசிலின் ரியோ நகரில்**

⊙ விளம்பரங்கள் மூலம் பணம் சம்பாதித்து முதல் இடத்தில் உள்ள கோல்வ் வீரர் யார்?
**டைகர் உட்ஸ் (445 கோடி)**
இதேவேளை, கிரிக்கெட் வீரர் டோனி 5 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

⊙ 2017 ஆம் ஆண்டுக்கான ஆசிய தடகள சம்பியன் ஷிப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
**இந்தியா**

⊙ பங்களாதேஷில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச உதைபந்தாட்டத் தொடரில் பங்குபற்றிய யாழ்.வீரர் யார்?
**மதனராஜா பிரேம்குமார் (நெல்லியடி)**

///////////////////////////////////////////////

⊙ சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து விடைபெறுவதாக நியுஸிலாந்து அணியின் சகல துறை வீரர் அறிவித்துள்ளார். அந்த வீரர் யார்?
**நாதன் மக்கலம்**

⊙ சர்வதேச கால்பந்து சம்மேளனம் பி∴பா அமைப்பின் முன்னாள் துணைத் தலைவருக்கு எதிராக வாழ்நாள் தடை என்ற அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அவர் யார்?
**ஜேக் வோனர்**

⊙ மலேசியாவில் அண்மையில் நடைபெற்ற உலக துப்பாக்கி சுடும் போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கத்தை வென்ற வீரர் யார்?
**அசிர திவுல்வெல (இவர் அதிரடிப்படையின் பொலிஸ் பரிசோதகராவார்)**

⊙ 2016 இல் பிரேசிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கால்பந்து போட்டிகள் நடைபெறவுள்ள இடம் எது?
**சாவோ பாவ்லோ அரினா அரங்கு**

⊙ அண்மையில் ஈரானிய கால்பந்து வீரர் மாரடைப்பால் காலமானார். அவர் யார்? **ஹடி நொறோச்சி**

⊙ இந்திய கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவர் யார்?
**சஷாங்க் மனோகர்**

⊙ சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் டென்னிஸ் போட்டியில் 4 ஆவது முறையாகவும் சம்பியன் பட்டம் வென்ற வீரர் யார்?
**ஜோகோவிச் (செர்பியா)**

## அழகுராணிகள் பக்கம் வீசிய வலையில்...

⮝ 2015 ஆம் ஆண்டுக்கான வெனிசுலா அழகுராணியாத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? **மரியம் ஸ்பாச்**

⮝ 2015 லெபனானின் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
**வலேரி அபோயு**

⮝ வெனிசுலாவின் தன்னினச்சேர்க்கை அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்ட அழகுராணி யார்?
**அர்ஜெனிஸ் கொன்ஸாலெஸ்**

# விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ அமெரிக்காவின் கடல்சார் சுற்றுச்சூழல் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட இந்திய மீனவப் பெண்மணி யார்
லெட்சுமி
இவ்விருது 2015 ஒக்ரோபர் 10 வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

❖ உலகப்புகழ் பெற்ற வேர்ள்ட் பினான்ஸ் வங்கியியல் விருதினை இரண்டாவது தடவையாகவும் பெற்றுக்கொண்ட வங்கி எது?
மக்கள் வங்கி

❖ வெனிஸ் சர்வதேச திரைப்பட விழாவில் மனித உரிமைக்கான படம் என்ற பிரிவில் விருதினைப் பெற்றுக்கொண்ட திரைப்படம் படம் எது?
'விசாரணை'

❖ தமிழ்த் தேசிய நாளிதழான உதயன் பத்திரிகைக்கு அண்மையில் கிடைக்கப் பெற்ற ஊடக சுதந்திரத்துக்கான விருது எது?
"எஸ்மண்ட் விக்கிரமசிங்க"

❖ அமெரிக்காவிலுள்ள கிரேக்கத்தின் பழமைவாத மத அமைப்பின் மனித உரிமைகளுக்கான உயர் விருதினைப் பெற்ற அமெரிக்காவின் துணை ஜனாதிபதி யார்?
ஜோ பிடன்

❖ 5 ஆவது தடவையாகவும் பினான்ஸ் ஏசியாவின் இலங்கையில் மிகச் சிறந்த வங்கி விருதை வென்ற வங்கி எது?
கொமர்ஷல் வங்கி

❖ இலங்கையில் 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த வர்த்தக வங்கியாக சிறந்த வர்த்தக வங்கியாகத் தெரிவு செய்யப்பட்ட வங்கி எது?
கொமர்ஷல் வங்கி
இவ்வங்கி பெற்றுள்ள 6 ஆவது சர்வதேச விருது இதுவாகும்.
ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்டு செயற்படும் இன்டர் நஷனல் பேங்கர் நிறுவனமே இவ்விருதினை வழங்கியுள்ளது.

❖ எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வில் - இலக்கியத்துக்கான அதியுயர் தேசிய விருது ஜனாதிபதியினால் யாருக்கு வழங்கப்பட்டது?
கலாநிதி சுப்பிரமணியம் (முல்லை மணி)

❖ இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு மும்பையில் அண்மையில் வழங்கப்பட்ட விருது என்ன?
“ஹிருதேநாத் மஸ்கேஷ்கர்”

❖ இலங்கையின் சிறந்த 100 நன்மதிப்பைப் பெற்ற நிறுவனங்களில் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் எது?
**99X Technology**

❖ கல்வியமைச்சின் “ஆசிரியர் பிரதிபா பிரபா-2015” விருது விழாவில் 3 ஆவது தடவையாகவும் விருது பெற்றுக்கொண்ட அதிபர் யார்?
**ஏ.ஸீ.எம்.ரிப்கான் அதிபர், அன்னாசிகல தமிழ் வித்தியாலயம் - மதுகம கல்வி வலயம்**

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌖ “வாடைக்காற்று வீசுகின்ற காலத்திலே...” என்ற பாடலைப் பாடிய நம்நாட்டுப் பாடகர் யார்?
**ஜோசப் இராஜேந்திரன்** (படம் : வாடைக்காற்று)

⌖ அமைதியின் தூதுவர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
**ஜவஹர்லால் நேரு**

⌖ இலங்கையில் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு எது?
*1857*

⌖ சார்க் அமைப்பில் 8 ஆவது நாடாக இணைந்து கொண்ட நாடு எது?
**ஆப்கானிஸ்தான்**

⌖ இரண்டாம் உலகப்போரின் முடிவில் இடிந்து தரைமட்டமாக்கப்பட்ட ஜப்பான் நாட்டின் பொருளாதாரத்தை வீறுகொண்டு எழச்செய்த காரணிகளில் ஒன்று பி.டி.சி.ஏ. (**PDCA**) எனப்படும் வேலை முறை ஆகும். இங்கு **PDCA** என்பது/விரிவாக்கம் யாது?
**Plan do check act**
**P - Plan**
**D - Do**
**C - Check**
**A - Act** **திட்டமிடு, செயற்படு, சோதனை செய், நடவடிக்கை எடு**
அதாவது ஜப்பானியர்களிடம் அசுர வேகத்தை உருவாக்கியது இந்தச் சூத்திரமாகும்.

⌖ மனிதனின் மார்புப் பகுதியைப் பாதுகாக்கும் எலும்பின் பெயர் என்ன?
ரிப்ஸ்

⌖ கொரியா நாடு தென்கொரியா - வடகொரியா என எத்தனையாம் ஆண்டு பிரிந்தன? *1953*

⌖ கப்பலோட்டிய தமிழன் யார்?
**வ.உ.சி.என்றழைக்கப்படும் உலகநாதன் சிதம்பரப்பிள்ளை அவர்கள்.**
இவர் ஒரு இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஆவார்.

⌖ வடக்கின் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா சென்ற தமிழனின் பாய்மரக் கப்பலின் பெயர் என்ன? **அன்னபூரணி**

⌖ 'புக்கர்' விருது யாருக்கு வழங்கப்படுகிறது?
ஆங்கில மொழியில் எழுதப்படும் சிறந்த முழுநீள புதினங்களுக்கு வழங்கப்படும் பரிசே இதுவாகும்.
பொதுநலவாய நாடுகளை அல்லது அயர்லாந்துக் குடியரசைச் சேர்ந்தவர்களால் எழுதப்படும் புதினங்களுக்கே இப்பரிசு வழங்கப்படுகின்றது.
இது 1968 இல் ஆரம்பிக்கப்பட்டது.

⌖ ஓவியர் மைக்கல் ஆஞ்சலோவின் முழுப்பெயர் என்ன?
**மைக்கலாஞ்சலோ டி லொடோவிக்கோ புவோனரோட்டி சிமோனி**
**(Michelangelo d Lodovico Buonarroti Simoni)**

⌖ ஐ.நா.வின் முதலாவது செயலாளர் நாயகம் யார்? **ரைகிவ்**

⌖ இதுவரை எட்டப்பட்ட ஐ.நா. தீர்மானங்கள் எத்தனை தெரியுமா?
*2 ஆயிரத்து 334*

⌖ "பெட்டம் ட்ரோலிங்" என்பது என்ன?
இது முறையற்ற மீன் பிடித்தல் முறையாகும். இம் முறையை இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த முறையால் கடல் வளம் மோசமாகப் பாதிக்கப்படும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

⌖ 'சங்கிலியம்' என்ற காவியத்தைப் பாடியவர் யார்?
காரை சுந்தரம்பிள்ளை

⌖ அமெரிக்காவின் 58 ஆவது ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறவுள்ளது?
*2016 நவம்பர் 8*

⌖ ஆண்டுதோறும் நடைபெறும் இலங்கை கிரிக்கெட் விருது வழங்கும் நிகழ்வில் - நான்கு விருதுகளை அள்ளிய இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் யார்?

அஞ்சலோ மத்தியுஸ்

இதேவேளை, குமார் சங்கக்கார தொடர்ச்சியாக நான்காவது முறையாகவும் ஆண்டின் பிரபல கிரிக்கெட் வீரருக்கான விருது பெற்றார்.

⌖ ஐ.நா.வின் உறுப்பு நாடாக இலங்கை எத்தனையாம் ஆண்டு இணைந்து கொண்டது? *1955 ஒக்ரோபர் 14*

⌖ ஐ.நா. அமைப்பு அண்மையில் எத்தனையாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது? *70*

## 2015 நோபல் பரிசு ஒரே பார்வையில் ....

⊙ **மருத்துவம் :**



வில்லியம் சி கம்ப்பெல் (William C.Campbell) (அயர்லாந்து)

சடோசி ஓமுரா (Satoshi Omura) (ஜப்பான்)

நாக்குப் பூச்சி ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களைக் குணமாக்கும் சிகிச்சை முறை குறித்து ஆய்வு செய்தமை.



யூயூ து (Youyou Tu) (சீனா)

மலேரியாவுக்கான சிகிச்சை முறை குறித்து கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டமைக்காக வழ



⊙ **இயற்பியல் / பௌதிகவியல் :**

- டகாகி கஜிடா (Tukaaki Kajita) (ஜப்பான்)
- ஆர்தர் பி.எம்சிடொனால்ட் (Authar B.MCDonald) (கனடா)

பிரபஞ்ச உருவாக்கத்தின் அடிப்படை மூலக்கூறு அல்லது அணுத்துகளாகக் கருதப்படும் நியூட்ரினோலின் ஊசலாட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் நியூட்ரினோக்களுக்கு நிறை உண்டு என்பதை இவர்கள் கண்டுபிடித்துள்ளமைக்ககாக வழங்கப்படுகிறது.

⊙ இரசாயனவியல் :



தோமஸ் விண்டால் (Thomas Lindahl) (சுவீடன்)

போல் மோட்டரிச் (Paul Modrich) (இங்கிலாந்து)

அஜீஸ் சன்கார் (Aziz Samcar) (துருக்கி)

டி.என்.ஏ. சேதமடைவதைத் தடுத்து சரிசெய்யும் பல்வேறு நடைமுறைகளை மூலக்கூறு மட்டத்தில் ஆய்வு செய்து கண்டு பிடித்துள்ளனர்.

⊙ **இலக்கியம் :**



ஸ்வெட்லானா அலெக்சிவிச்
(Svetlana Alexievich) (வயது-67) பெலாரஸ்)
இவர் ஓர் ஊடகவியலாளர். அத்துடன் இந்த விருதை வெல்லும் முதல் ஊடகவியலாளரும் ஆவார். இவரது எழுத்துக்களை "சமகாலத்தின் துணிச்சல் மற்றும் வேதனையின் நினைவுச் சின்னம் எனவும் கூறுவர்.
இவர் எழுதிய நூல் "போரின் பெண் தன்மையற்ற முகம்" இது 2ஆம் உலகப் போரில் பங்குபற்றிய நூற்றுக்கணக்கான பெண்களைச் சந்தித்து அவர் எடுத்த நேர்காணல்களாகும்.

⊙ பொருளாதாரம் :



அன்கஸ் டியரொான் (Angus Deaton),
(வயது-69), (அமெரிக்கா)
நுகர்வு, வறுமை, நலன்புரி என்பன தொடர்பில் அவர் ஆற்றிய பணிக்காகவே இப் பரிசு வழங்கப்படுகிறது.

⊙ சமாதானம் / அமைதி :

தியூனிஷிய சிவில் சமூக ஜனநாயக குழு (Tunisian Mediator Group) தியூனிஷியாவில் மக்கள் எழுச்சியையடுத்து வன்முறை அச்சுறுத்தலை



நாடு எதிர்கொண்ட சமயத்தில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப் பப் பாடுபட்டமைக்காகவே இப்பரிசு வழங்கப்படுகிறது.
இக்குழுவில் -

- தியூனிஷிய தொழிலாளர் ஒன்றியம்
- தியூனிஷிய தொழிற்றுறை வணிக கைவினைப் பொருட்கள் கூட்டமைப்பு
- தியூனிஷிய மனித உரிமைகள் முன்னணி
- தியூனிஷிய வழக்கறிஞர் ஆணையம்

Valai வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு


**சந்தா விபரம் - Delivered to Your Home**

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road,Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**60/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 300/- மட்டுமே.**

**இழை 50 இல் இருந்து**



உங்கள் **வலை**யில்
**நுண்ணறிவும் (IQ)**
**இணைகிறது...**

| | |
|---|---|
| **விலை 30/- மட்டுமே** | **Pages 20** |

தொகுப்பாசிரியர் : சி.என்.எச்.சாள்ஸ்

**எதிர்பாருங்கள்.....**


வடக்கு மாகாண அலுவலகப் பணியாளர் திறந்த போட்டிப் பரீட்சையினை முன்னிட்டு அண்மைக்கால தகவல்கள் அடங்கிய பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் மொழித்திறன் அடங்கிய சிறு வழிகாட்டி தொகுப்பு ஒன்றினை உங்களது நன்மை கருதி வெளியிடுவதற்கு எண்ணியுள்ளேன். எனவே குறிப்பிட்ட பிரதிகளே அச்சாகவுள்ளதால் உங்களுக்கான பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருங்கள்... நன்றி.

## ❒ தாபரிப்பு பெற்றோர் திட்டம் :

- இது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கான ஓர் திட்டமாகும்.
- ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் வறிய மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவு செய்யப்பட்ட இந்த மாணவர்களை அரச, தனியார் நிறுவனத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தாபரிப்புப் பெற்றோர்களைத் தெரிவு செய்து தாபரிப்பு பணத்தினையும், பாடசாலை உபகரணங்களை யும் வழங்கி வைப்பர்.
- இத்திட்டத்தில் வறிய மாணவர்களின் கல்வியில் அவர்களது உயர் கல்வி வரைக்கும் இவ் தாபரிப்பு உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட வுள்ளது.
- மேற்படி இத்திட்டமானது 2015 ஒக்ரோபர் மாத இறுதியில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## ❒ தேசிய கீதங்கள் :



- ⮝ இரண்டு தேசிய கீதங்களைக் கொண்ட நாடு எது? அவுஸ்ரேலியா
- ⮝ திருமண நிகழ்வின்போது தேசிய கீதம் கட்டாயமாகப் பாடப்படும் நாடு எது? நைஜீரியா
- ⮝ பாடல் வரிகள் இல்லாமல் ஒரு வித இசையை மட்டுமே தேசிய கீதமாகக் கொண்ட நாடுகள் எவை?
  ஏமன், ஸ்பெயின், கட்டார்
- ⮝ உலகின் மிகவும் பழமையான தேசிய கீதத்தினைக் கொண்ட நாடு எது? ஒல்லாந்து
- ⮝ மிகவும் நீளமாக தேசிய கீதத்தினைக் கொண்ட நாடு எது?
  கிறீஸ்
- ⮝ மிகவும் குறுகிய தேசிய கீதத்தினைக் கொண்ட நாடு எது? ஜப்பான்



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com